## சுருக்கம்

நில எடுப்பு – சென்னை மாவட்டம், புரசைவாக்கம் – பெரம்பூர் வட்டம், பெரம்பூர் கிராமம், பிளாக் 22 ல் எண்.362 பாகம் பகுதிக்குட்பட்ட மாதவரம் நெடுஞ்சாலையை விரிவுபடுத்துவற்காக சுமார் 1350 சதுர அடி – தனியார் நிலங்களை ரூ.25,54,494/– செலவில் கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894 பிரிவு 17 (2) ன் கீழ் நிர்வாக ஒப்புதல் அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.150 நாள்: 05.08.2010

ஆடி – 20,
திருவள்ளுவர் ஆண்டு – 2041

படிக்க:

முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.எம்2/6343/2010, நாள் 30.03.2010

* * * * *

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட சென்னை முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதத்தில் சென்னை மாவட்டம், புரசைவாக்கம் – பெரம்பூர் வட்டம், பெரம்பூர் கிராமம், பிளாக் 22 ல் எண்.362 பாகம் பகுதிக்குட்பட்ட மாதவரம் நெடுஞ்சாலையை விரிவுபடுத்த சுமார் 1350 சதுர அடி தனியார் நிலத்தை கையகப்படுத்த நில எடுப்பு சட்டம் 1894 பிரிவு 17 (2) ன் கீழ் அரசின் நிர்வாக ஒப்புதல் கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார் என்றும், இந்நேர்வில் நில எடுப்பு கோரியுள்ள நிலங்களை புரசைவாக்கம் – பெரம்பூர் வட்டாட்சியரும், சென்னை மாநகராட்சி உதவி செயற் பொறியாளரும் சேர்ந்து 23.06.2009 அன்று கூட்டுப் புலத்தணிக்கை செய்துள்ளார் என்றும், நிலயெடுப்புக்குட்பட்ட புல எண்.362 பாகம் 1350 சதுர அடி பரப்புள்ள நிலத்தில் மரங்கள், புராதன சின்னங்களோ எதுமில்லை என்றும் பள்ளி கட்டிடம் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார் எனவும், இந்நில எடுப்பு உத்தேசிக்கப்பட்டுள்ள தனியார் நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| (i) | நில மதிப்பு சதுர அடி 1க்கு ரூ.1048/– வீதம் 1350 சதுர அடி மதிப்பு | ரூ.14,14,800/– |
| (ii) | கட்டிட மதிப்பு | ரூ.4,38,970/– |
| | 30% ஏற்றத்தாழ்வு ஈடு (Solatium) | ரூ.5,56,131/– |
| | நில மதிப்பின் மீதான 12% கூடுதல் தொகை | ரூ.1,44,594/– |
| | ஆக மொத்தம் | ரூ.25,54,494/– |

மேலும் சென்னை மாநகராட்சி மன்றத்தின் தீர்மானம் எண்.605/2008, நாள் 30.12.2008 ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளது எனவும், கையகபடுத்தப்படும் நிலங்கள் நகர்புற நில உச்சவரம்பு திட்டத்தின் கீழ் கவரப்படவில்லை எனவும், மேற்படி சென்னை மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை ஏற்று முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்கண்ட சூழ்நிலையில், சென்னை முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாவட்டம், புரசைவாக்கம் – பெரம்பூர் வட்டம், பெரம்பூர் கிராமம், பிளாக் 22 ல் எண்.362 பாகம் பகுதிக்குட்பட்ட மாதவரம் நெடுஞ்சாலையை விரிவுபடுத்துவற்காக சுமார் 1350 சதுர அடி தனியார் நிலங்களை ரூ.25,54,494/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து அம்பத்தி நான்காயிரத்து நானூற்றி தொண்ணூற்று நான்கு மட்டும்) செலவில் தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894 பிரிவு 17 (2) ன் கீழ் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் கையகப்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை வருவாய் மற்றும் நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. (அ.சா.கு.எண்.24435/நிநி2/10–1, நாள் 07.06.2010 மற்றும் 31924/ந.நி.ம.கு.வ/10, நாள் 18.06.2010).

/ ஆளுநரின் ஆணைப்படி /

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3

<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 9
வருவாய் (நி.மு.4/நி.நி.2) துறை, சென்னை – 9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்